




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,

வேளாண் சார்பு மற்றும் உணவு பதப்படுத்துதல் தொடர்பான  மண்டல அளவிலான கருத்தரங்கம் நாகர்கோவில்,

உடுப்பி இண்டர் நேஷனலில் இன்று (22.12.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 900/2016 நாள்: 22.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,
வேளாண் சார்பு மற்றும் உணவு பதப்படுத்துதல் தொடர்பான
மண்டல அளவிலான கருத்தரங்கம்
இன்று (22.12.2016) நடைபெற்றது.**

மத்திய அரசின் கதர் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் மூலம், வேளாண் சார்பு மற்றும் உணவு பதப்படுத்துதல் தொடர்பான, தென் மண்டல அளவிலான இரண்டு நாட்கள் (22.12.2016 மற்றும் 23.12.2016) கருத்தரங்கம் நாகர்கோவில், உடுப்பி இண்டர் நேஷனலில் நடைபெறுகிறது.

துவக்க நாளான இன்று (22.12.2016) கதர் கிராம தொழில்கள் ஆணையம், தென்மண்டல உறுப்பினர் திரு.ஜி.சந்திரமௌலிஜி அவர்கள் முன்னிலையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கருத்தரங்கத்திற்கு தலைமையேற்று, குத்துவிளக்கேற்றி வைத்து, பேசும்போது தெரிவித்ததாவது:-

மத்திய அரசின் கதர் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் மூலம், வேளாண் சார்பு மற்றும் உணவு பதப்படுத்துதல் தொழில்கள் சார்ந்த தொழில்நுட்ப அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் சர்வோதய சங்கங்கள், பாரதப்பிரதமர் வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டப்பயனாளிகளுக்கான இரண்டு நாட்கள் (22.12.2016 மற்றும் 23.12.2016) கருத்தரங்கம் இன்று முதல் நடைபெறுகிறது.

கருத்தரங்கில் ஆராய்ச்சி வல்லுனர்களால் வழங்கப்படும் அறிவுரைகள் மற்றும் தொழில்நுட்பத்தை நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். அதனை குறைந்தபட்சமாக தங்கள் வீட்டில் அருகில் உள்ள 10 நபர்களுக்கு தெரிவித்து, உணவுப் பொருட்கள் தயாரிப்பது மற்றும் பதப்படுத்துதல் குறித்து விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும். கதர் மற்றும் கிராம தொழில்கள் மூலம் ஏழைகள் மற்றும் ஊரக பகுதியில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும். ஏனென்றால், அவர்களே உணவுப்பொருட்களை தயாரித்து, விற்பனை செய்து வருகிறார்கள். ஆகையால் எந்தவொரு தீங்கும் ஏற்பட வாய்ப்பு மிகவும் குறைவு. அதுமட்டுமல்லாமல், கதர் கிராமம் மற்றும் தொழில்கள் மூலம் நிரந்தர வருமானம் கிடைக்கும். குறிப்பாக அரசால் வழங்கும் மானியம் தகுதியான நபர்கள் அனைவரும் பெற்று, ஒரு சிறு தொழிலாவது துவக்கி, வாழ்வில் முன்னேற வேண்டும்.

எனவே கருத்தரங்கத்திற்கு வருகை தந்த அனைவரும், இந்த இரண்டு நாட்கள் நடைபெறும் உணவு பொருட்கள் தயாரிப்பது மற்றும் பதப்படுத்துதல் குறித்து தெரிந்து கொண்டு, பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

முன்னதாக கதர் கிராமம் மற்றும் தொழில்கள் மூலம் வைக்கப்பட்டிருந்த உணவுபொருட்கள் கண்காட்சியினை பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் கதர் கிராமத்தொழில்கள் ஆணையம் (மதுரை) துணை இயக்குநர் (பொ) திரு. பி.நல்லமுத்து, துணை இயக்குநர் (பொ) முனைவர் எஸ். கிரிப், உதவி இயக்கநர்கள் திரு. வாசிராஜன், திரு. ராய், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. விஸ்வநாதன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.